மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 116. திரு. வே. பெரியசாமி. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

116—

மலைவாழ் மக்களுக்கு வீடு கட்டும் திட்டம்.

* 335 திரு. வே. பெரியசாமி:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் பர்கூர் ஊராட்சிக்குட்பட்ட சோழகணை பாரஸ்டு, காக்காயனூர் பாரஸ்டு ஆகிய செட்டில்மெண்டுகள், ஒசூர் ஆகிய இடங்களில் வாழும் மலைவாழ் மக்களுக்கு 1991-92-ல் வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

முற்பகல் 10.25

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டத்தில் காக்காயனூர், சோழகணை, ஓசூர் போன்ற பகுதிகளில் ஆதிவாசி மக்கள் தனியாக நிறைந்து வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். வேறு எந்த சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் அங்கு இல்லை. இப்படிப் பட்டவர்கள் காட்டின் நடு மத்தியில் குடிசைகள் போட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நலன் குறித்து சிறப்புத் திட்டத்தின்கீழ் நீங்கள் இந்தத் திட்டத்தை எடுத்து, வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம் பழங்குடிகள் துணைத் திட்டத்தின்கீழ் வாராத பகுதியாகும். இங்குள்ள

1991 செப்டம்பர் 30]

பழங்குடி மக்களின் மேம்பாட்டிற்காக "சிதறி வாழும் பழங்குடிகள்" (Dispersed tilted)group என்ற தலைப்பின் கீழ் திட்டங்கள் தீட்டலாம். நடப்பு ஆண்டில் சிதறி வாழும் பழங்குடிகள் நலத் திட்டத்திற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ. 30 லட்சம் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதில் 12.50 இலட்சத்தை பழங்குடிகளுக்கு வீடுகள் கட்டித் தர செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வீட்டு மனைப் பட்டா உள்ள பழங்குடிகளுக்கு மட்டுமே வீடுகள் கட்டித் தர இயலும். ஆகையினால் பழங்குடி மக்கள் வாழும் மாவட்டங்களில் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தர தக்க முன்மொழிவுகளை அனுப்புமாறு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து இன்னும் பதில் வராததினால் 1991-92-ல் சிதறி வாழும் பழங்குடிகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இன்னும் முழுமையாகவில்லை. இதனால் பெரியார் மாவட்டம் பர்கூர் ஊராட்சிக்கு உட்பட்ட பாரஸ்ட் செட்டில்மெண்ட் உட்பட எந்த இடமும் இன்னும் சிதறி வாழும் பழங்குடி மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்படவில்லை. மேலும் பாரஸ்ட் செட்டில்மென்ட் பகுதிகளில் வீடுகள் கட்ட வனத்துறை அனுமதிக்குமா என்ற விபரமும் தெரியவில்லை. எனவே, பெரியார் மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் இது சம்பந்தமாக அங்குள்ள வனத்துறை அலுவலர்களைக் கலந்து ஆலோசித்து அறிக்கை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார். வீடுகள் கட்டித் தர இயலுமாயின் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து அறிக்கைகள் பெற்ற பின்னர், சிதறி வாழும் பழங்குடிகளுக்கு 1991-92-ல் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் இந்த இடங்கள் சேர்க்கப்பட்டு வீடுகள் கட்டித் தரப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வே. பெரியசாமி அவர்கள். இதற்கு மேலும் கேள்வி உண்டா?

திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே. இம்மன்றத்து மன்னவராய், மணிசிரத்து கோமகனாய். முல்லைப்பூ எடுத்து முகத்தினிலே எறிவதுபோல் சொல்லைச் சிலம்பாக்கி எங்களை எல்லாம் சொக்க வைத்திருக்கிற

1991 செப்டம்பர் 30

தமிழ்த்தாய் ஆண்டுகொண்டிருக்கிற இந்த நன்னாளில், அங்கே காட்டு இலாகா அதிகாரிகள் பாரஸ்ட் செட்டில்மெண்டில் வீடு களைக் கட்டக்கூடாதென்ற திட்டத்தை வைக்கவில்லை என்பதையும், அவர்கள் கட்டிக்கொள்ளலாமென்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்கள் மூலமாக அமைச்சரவர்களுக்குத் தெரியப்படுத்தி, விரைவிலே நீங்கள் கருணை உள்ளத்தோடு சொல்லியிருக்கிற அந்த வார்த்தைகளை அமுல்படுத்தி, மாண்புமிகு இதய தெய்வம் அவர்கள் ஆசியோடு—வறண்ட பகுதியாக உள்ள, 1947 ஆகஸ்ட் 15-ல் நாம் சுதந்திரம் பெற்றோம் என்று சொன்னாலும், இன்னும் சுதந்திரம் இல்லாமல் தலைவிரி கோலமாக அங்கே வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுடைய நிலையை கவனத்திலே கொண்டு ஆவன செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையின்பேரில் காட்டு இலாக்காவினரிடம் பேசி, உரிய நடவடிக்கை உரிய நேரத்தில் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 117. திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

117—
திருவொற்றியூரில் காட்டிலாகாவிற்குச் சொந்தமான சந்தன மரங்கள்

* 1009 திரு. டி. சுதர்சனம் :
மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1991 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் சென்னையை அடுத்த திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் காட்டிலாகாவிற்குச் சொந்தமான சந்தன மரக் கட்டைகள் பிடிபட்டனவா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்த விவரம் என்ன?